விலை: 60.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 321 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 19 ஞாயிற்றுக்கிழமை (05.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### அன்பு வாசகர்களே!

தவிர்க்க முடியாத காரணத்தால் இன்றைய **சங்கு நாதத்தின்** முழுப் பதிப்புகளும் வெளிவரவில்லை. தொடர்ந்து வரும் காலங்களில் முழுப் பதிப்புக்களும் வெளிவரும். (ஆ-ர்)

# தமிழ் மக்களின் பிரச்சினைக்கு பாராளுமன்றம் மூலம் நிலையான தீர்வு

## நிர்மலா சீதாராமனிடம் ரணில் தெரிவித்தாராம்



*(கொழும்பு)*

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு பாராளுமன்ற அங்கீகாரத்துடன் நிலையான தீர்வு வழங்கப்படும். இவ்வாறு இலங்கை வந்திருந்த இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் ஜனாதிபதி கூறியுள்ளார் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## யாழ்.பல்கலை மாணவர்களால் மட்டக்களப்பில் இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு - மயிலத்தமடு, மாதவணை மேய்ச்சல் தரை மீதான சிங்கள ஆக்கிரமிப்பை உடன் நிறுத்தக்கோரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று போராட்டமொன்று 15

# யுத்த வெற்றி என்ற பெயரில் தேசிய வளங்கள் அபகரிப்பு

## ராஜபக்ஷ குடும்பம் மீது சஜித் விளாசல்



(கொழும்பு)

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தோம் என தெரிவித்தே தேசிய வளங்களை ஒரு குடும்பமே அபகரித்துள்ளது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மூன்றாவது முறை 15

# தேநீர், உணவுப்பொதி கொத்து, பிரைட் றைஸ் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

நள்ளிரவு முதல் உணவு வகைகளின் விலைகளை அதிகரிக்க அகில இலங்கை உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது, சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் மேற்கண்டவாறு தெரிவித்தார். 15

# நூதனமான முறையில் முல்லையில் பணம் அபகரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் நூதன முறையில் பலரிடம் பணம் அபகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு கிழக்கு பகுதியில் நேற்று சனிக்கிழமை இனந்தெரியாத இருவர் சிலரது வீடுகளுக்கு சென்று உங்களுக்கான அஸ்வெசும கொடுப்பன 80,000 ஆயிரம் ரூபாய் உங்களது கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும், அதை பெறுவதற்கு 30 ஆயிரம் ரூபாய் தற்பொழுது தன்னிடம் ஒப்படைக்க 15

# அரசின் ஆலோசனைகளை அமுலாக்காவிட்டால் நடவடிக்கை

## அரச நிறுவன பிரதானிகளுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்திக்காக வழங்கப்படும் ஆலோசனைகளை உரிய வகையில் நடைமுறைப்படுத்தத் தவறும் அரச நிறுவன பிரதானிகளுக்கு எதிராக எதிர்வரும் நாட்களில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலேயே ஜனாதி 15



### ஊட்டச்சத்து குறைபாடு

# முதல் 10 நாடுகளின் பட்டியலில் இலங்கை

(கொழும்பு)

அதிக ஊட்டச்சத்து குறைபாடுகளைக் கொண்ட முதல் பத்து நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

யுனிசெப்பின் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறையின் குடும்ப வருமானம் மற்றும் செலவினக் கணக்கெடுப்பு அறிக்கையிலேயே இந்த தகவல் வெளியாகியுள்ளது. 15

## ரணிலின் வாக்குறுதி நிறைவேறவில்லை சி.வி.விக்னேஸ்வரன்

(கொழும்பு)

தமிழ்ச் சமூகம் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகள் எவற்றையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்றவில்லை என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள். 15.

# 11 பேர் கொண்ட தூதுவர் குழு நேற்று யாழ்.விஜயம்

## பல்வேறு தரப்புகளுடன் கலந்துரையாடல்




04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை கணேஸ்வரன்

**B.A, Dip in Education (நயினாதீவு)**

**(ஓய்வுநிலை அதிபர் - யா/அரியாலை பூம்புகார் அ.த.க பாடசாலை)**
**(முன்னாள் அதிபர் - நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்)**

நயினாதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.17/12 சந்தனமாதா லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கணேஸ்வரன் அவர்கள் 02.11.2023 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (ஓய்வுநிலை ஆசிரியர்) மற்றும் இலட்சுமி (கனடா) தம்பதிகளின் அன்பு மகனாரும் காலஞ்சென்றவர்களான கனகரெத்தினம் - புஸ்பவதி தம்பதிகளின் அன்பு மருமகனும் பழனிவேல் கமலேஸ்வரி தம்பதிகளின் அன்புச் சம்பந்தியும் திருஞானவதியின் (ஓய்வு நிலை ஆசிரியை) அன்புக் கணவரும் Dr.உமாலக்சியின் அன்புத் தந்தையாரும் Dr. லக்ஸ்மன் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமனாரும் இராஜேஸ்வரன் (ஜேர்மனி), கலைவாணி (கனடா), கல்யாணி (கனடா), ஜெயராணி (கனடா), காலஞ்சென்ற உமாவேணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரசேகரம் (கனடா), ரவிலோசனன் (கனடா), கமலவேணி (ஜேர்மனி), பத்மநாதன் (கனடா), சிவஞானம் (இலங்கை), மகேந்திரன் (லண்டன்), ரோகிணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கலாவதி, லதா (லண்டன்), பஞ்சானந்தராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகலனும் கிரிஜா, அம்பிகா, நிற்சிந், பிரகதீஸ், பிரகதீபா, லவன், குகேசன், அமுதீசன், கஜானன், சிந்துரா, லக்ஷனா ஆகியோரின் அன்பு மாமனாரும் ராஜீவ், ரஞ்சினி, ஜேஜீவ், சந்தியா, ஆதித்தியா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் கஜானனி, சாதனா, கிரீசன், அஸ்மினா, தமீனா, ஜஸ்வின், நதீனா, அனுசா, அஞ்சனா, அகல்யா, ஆரியன், பிரியானா, பிசானா அகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2023) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இல.17/12,
சந்தனமாதா லேன்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல் - குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு: திருமதி தி.கணேஸ்வரன் - 074 313 4863,
Dr. ல.உமாலக்சி - 077 974 5075, Dr. ப.லக்ஸ்மன் - 076 697 0363,
திரு. சோ.சந்திரசேகரம் - 077 219 8033, திரு.க.சிவஞானம் - 077 071 1924

(17666)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நேபாளத்தில் பயங்கர நிலநடுக்கம்

# 128 பேர் உயிரிழப்பு, பலர் காயம்!

## உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என அச்சம்

(நேபாளம்)

**நேபாளத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் 128 பேர் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



இந்த பலி எண்ணிக்கை மேலும் உயரக் கூடும் என அஞ்சப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

6.4 ரிக்டர் அளவில் ஏற்பட்ட இந் நிலநடுக்கத்தால் வீடுகள் மற்றும் கட்டடங்கள் அசைந்ததால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.

அவர்களில் படுகாயமடைந்த சிலர் சுர்கெத் பகுதிக்கு சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்நிலநடுக்கம், வடஇந்தியாவின் டில்லி - என்.சி.ஆர், உத்தர பிரதேசம் மற்றும் பீகார் பகுதிகளிலும் உணரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# டிசெம்பர்-22 3 ஆம் தவணை விடுமுறை

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணை பாடசாலை விடுமுறை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் 2024 பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

முதலாம் தவணைக்கான பாடசாலை நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# மக்களை நெருக்கடிக்குள்ளாக்கினால் மீண்டும் போராட்டம் வெடிக்கும்

## நாமல் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டு மக்களை மென் மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் அமைந்தால் அது தொடர்பில் கடுமையான தீர்மானம் எடுப்போம் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய அரசாங்கம் எடுத்துள்ள ஒருசில தீர்மானங்களினால் நாட்டு மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.


மின்னுற்பத்தி கட்டமைப்பில் மாற்று திட்டங்களை செயற்படுத்துவதை விடுத்து மின்கட்டண அதிகரிப்புக்கு மாத்திரம் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. முறையற்ற வகையில் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு முதல் பெறுமதிசேர் வரி வீதத்தை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி அரச வருமானத்தை அதிகரித்து விட்டோம் என சர்வதேசத்துக்கு காண்பிப்பதால் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாது என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தோம்.

நிறைவடைந்த ஒரு வருட காலத்தில் பாரிய மாற்றங்கள் ஏதும் சமூக கட்டமைப்பில் ஏற்படவில்லை.

நாட்டு மக்களை தொடர்ந்து நெருக்கடிக்குள்ளாக்கினால் மக்கள் போராட்டம் மீண்டும் தலைத்தூக்கும் என அவர் தெரிவித்தார். (நி)

# ஓராண்டு நினைவஞ்சலி



## திரு. வைரன் வேலாயுதன்

ஆண்டொன்று போனதப்பா ஆறவில்லை உங்கள் நினைவு
நல்வாழ்வு வாழ வைத்தாய் வாழ்கின்றோம் நாங்கள்
நாளாந்தம் உங்கள் வழியில் நாட்களை நகர்த்துகின்றோம்
"நாளை என்பதை இன்றே செய்
இன்று என்பதை இப்பொழுதே செய்"
என்பது உங்களின் பாதை அப்பா





## திரு. வேலாயுதன் ஸ்ரீதயாபரன் (கண்ணன்)

நல்லவர்களை ஆண்டவன் இந்தப் பூமியில் நெடுங்காலம்
வாழவைப்பதில்லை அந்த வரிசையில் நீயும் கண்ணா இணைந்துவிட்டாய்
நீ சம்பாதித்தது கோடியானாலும் உன்னை நேசித்தது கோடானகோடி மக்களே
நிழலின் அருமை வெயிலில் திரியும் போதுதான் தெரியும்
ஆனால் உன் நிழல் என்றைக்கும் எங்களோடு இணைந்திருக்கும் –சாயிராம்
அப்பாவும் நீ இருக்கும் இடம் தேடி உன்னோடு இருக்கிறார். (7657)

திருவேரகம், உடுப்பிட்டி. உங்கள் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

## நிலப்பரப்பு

- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும் 3 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 Km, திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 Km, நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 Km, திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 Km
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**பார்வையிடும் நேரம் :**
**காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை**

தொடர்புகளுக்கு : ஜெயம்

(17674)

**077 814 7389, 077 986 5457**


## 11 பேர்...

வெளிவிவகார அமைச்சினால் வெளிநாடுகளுக்கு புதிதாக நியமனம் செய்யப்பட்ட 11 பேர் கொண்ட தூதுவர் குழு நேற்று யாழ்ப்பாண மாவட்டத் திற்கு விஜயம் செய்ததோடு பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டது.

இத்தாலிக்கான தூதர் சத்யஜித் ரோட்ரிகோ, எகிப்துக்கான தூதர் மதுரிகா வெனிங்கர், பங்காளதேசத் திற்கான உயர்ஸ்தானிகர் தர்மபால வீரக்கொடி, சிங்கப்பூருக்கான உயர் ஸ்தானிகர் செனரத் திசாநாயக்க, பெல்ஜியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான தூதுவர் சந்தன வீரசேன, இந்தியாவுக்கான உயர் ஸ்தானிகர் க்ஷேனுகா செனவிரத்ன, பாகிஸ்தானுக்கான உயர்ஸ்தானிகர் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, நேபாளத்திற்கான தூதுவர் எயார் மார்ஷல் சுதர்சன் பத்திரன,

கியூபாவுக்கான தூதுவர் அட்மிரல் நிஷாந்த உலுகெதென்ன,

பிரித்தானியாவுக்கான உயர்ஸ்தானிகர் ரோஹித போகொல்லாகம ஆகியோர் அடங்கிய குழுவினரே யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்.

யாழ்ப்பாணம் பொது நூலகம், யாழ்ப்பாணம் வணிகர் கழகம் ஆகிய இடங்களுக்கு சென்றதுடன் மதத் தலைவர்கள், சிவில் சமூகத்தினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடினர்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியால் தூதர்களுக்கான இரண்டு வார வழிகாட்டல் திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் வடக்கு மற்றும் தெற்கிற்கு விஜயம் செய்து கள நிலைமைகளை அறிந்து கொள்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ம-7,33)


**ENGLISH for Gr. 6 - O/L**

P.THARMAKUMARAN (P.Mathan)
BA(Eng.Lit), Dip.in.Eng

**NEWTON** Group Classes

18/18, Wyman Road, Nallur. (17678)

TP: 077 792 3653

**Romania வேலைவாய்ப்பு விசா**

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**

(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்) (C-7560)

**021 222 1265,076 250 0098**

**ஓலைச்சுவடி சோதிட நிலையம்**

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் காண்டம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப் பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

**மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ளவர்களுக்கு வவுனியாவில் வாசிக்கப்படும். சுபம்**

(17681)

தொடர்புகளுக்கு:-ஓலைச்சுவடி சோதிட நிலையம்

கைலாசப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு 076 328 7110

**நிறுவை தராசு வகைகள் விற்பனைக்கு உண்டு**

அரச அங்கீகார முத்திரையிட்ட (Licence) நிறுவை தராசு வகைகள் யாவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

1 Year Warranty

**நந்தலாலா இரும்பகம்**

**29, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.** (17679)

**021 222 6234**
**077 780 5950**

**ஆடுகள் விற்பனைக்கு**

கோண்டாவில் சோளம் தோட்டம் பகுதியில் ஆடுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : (17677)

**075 511 3457**


# மரண அறிவித்தல்



## சிவசம்பு யோகநாதன்
## (ஓய்வு நிலை தபாலதிபர்)

சுன்னாகம் தில்லைகட்டியை பிறப்பிடமாகவும் வரியப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு யோகநாதன்(ஓய்வு நிலை தபாலதிபர்) அவர்கள் 3.11.2023 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - சிவகாமி தம்பதிகளின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, சரஸ்வதி, சுந்தரம், சின்னம்மா, செல்லம்மா, நித்தியானந்தம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தக்சாயினி(அபிவிருத்தி உத்தியோகத்தர், வலிதெற்கு பிரதேச செயலகம்), ஆனந்தன் (Network Engineer-சிங்கப்பூர்), சகிந்தன்(பொதுச் சுகாதார பரிசோதகர் யாழ் மாநகர சபை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஜீவரூபன்(ஆசிரியர் மல்லாகம் ம.வி), பாதுஜா(அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ் மாவட்ட செயலகம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கவிசாளினி, ஜனனி, புருசோத்தமன், ஜெயசாளினி, சங்கவி, கருணியன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 6.11.2023 திங்கட்கிழமை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

077 697 5157
077 344 9972

தகவல் :

(C-7563)



ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

# கூறுவிலை கோரல்

ஆலயத்தில் பின்வரும் வேலைகளுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1. காரியாலய கூரைவேலை திருத்தம்
2. அலுவலக கட்டிடங்கள் விஸ்தீரணம்
3. யாகசாலை கூரை அமைப்பு. (55'x50')
4. யாகசாலை 33 குண்டங்கள் அமைப்பு.
5. யாகசாலை அலங்காரம் (கமுகமரங்களால் அலங்காரம் உட்பட)
6. மூலஸ்தானம் மற்றும் மூன்று கோபுரங்கள் என்பவற்றுக்கான கும்பாபிஷேகத்திற்கான ஏணிப்படி அமைத்தல்.

கூறுவிலை படிவத்தினை ஆலய நிர்வாகசபை காரியாலயத்தில் 1000/= வினை செலுத்தி படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி 2023.11.11ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படி "செயலாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு" எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது கோயில் நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் இடப்படுதல் வேண்டும்.

ந.மோர்கனரூபன்
செயலாளர்
அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

(C-7561)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் குருபூசை 28.10.23
# ஞானத்தை அருளிய திருவடி வாழ்க

### குரு அருளே திருவருள்

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குரு உரு சிந்தித்தல் தானே**

திருமந்திரம் ஒரு சித்தன் செந் தமிழில்
பாடிய வாழ்வியல்



உயர்வான வேதாகமங்கள் பதினான்கும் உலகம் மகிழத்தந்தருளிய பரம்பொருளை, அன்பர்க்கு அருளும் உயர் பண்புடைய அத்த லைவனை என் உள்ளத்தே வைத்து இரவும் பகலும் " இறைவா, இறைவா" என்று நான் போற்றிப் பரவ என் துன்ப வல்வினைகள் தலைதூக்காது ஒழிந்தன.

**திருமூல ஞானத் தெளிவுடையோர்**
**தெருவுக்கு ஓரிருவர் இருந்தால் போதும்**
**தமிழர் வாழ்வு சிறக்கும் வழி பிறக்கும்**
**திருநாளும் மிக விரைவில் வந்து சேரும்**
**அது வருநாளை எண்ணித் தவமிருப்போம்**
**திருமூல ஞான நெறி வளர்ப்போம்.**

உலகமே மாயம்,காயமே பொய் என வாதம் வலுப்பட்டிருந்த சித்தர்கள் மரபில் மானிடம் செழிக்க மா மழை பொழிந்த திருமூலர். மானுட உடம்பின் மகத்துவத்தை மனத்தில் பதிய வைத்த மாமேதை திருமூலர். திருமந்திரம், தமிழ்த்தேன் குடம், தொட்ட இடமெல்லாம் தித்திக்கும் உள்ளில், உணர்வில், உயிரில் மானுடச் சிறப்புக்கு மகத்துவம் சேர்த்த மாமனிதர்.


மனம் தான் அனைத்துக்கும் அடிப்படை, அதை அடக்கினால் பஞ்ச பூதங்களும், ஐம்புலன்களும் நமக்கு அடிமையாகி விடுகின்றன. எவன் தன்னை உணர்கிறானோ, எவன் தன்னில் இறைவனைக் காண்கிறானோ அவனுள் உலகமே அடக்கம். இறைவனை அடையும் கல்வியறிவு, ஞான அறிவு, பக்தி அறிவு இருந்தால் தான் உலகை வழி நடத்த முடியும். பணத்தாலும் பதவியாலும் எதையும் சாதிக்க முடியாது உலகம் கண்ட உண்மை.

(2541) **துன்ப வினை அகலத் துணை செய்தான்.**
உகந்தான் ஒன்பதும் ஐந்தும் உலகம்
பகர்ந்த பிரான் என்னும் பண்பனை நாடி
அகந்து எம் பிரான் என்பன் அல்லும் பகலும்
இகந்தனவல் வினையோடு அறுத்தானே.

எம் இறைவனை எம் துன்பவினை அறத் துணை செய்வான்.திருமூலர், திருமந்திரம் 2542 இல் இரு போதும் தொழுக இறைவனை, எனவும் நெடுங்காலமாக நன்மையடைய தொகுத்துச் சொன்ன பல மந்திரம், தெய்வமும் பல, நாம் பெறும் பயனும் பலவாகும்.இறைவனை பகல், இரவு ஆகிய இரு வேளைகளிலும் பணிந்து துதித்து வழிபடுங்கள்.வழிபடும் இடமும் காலமும் வேறாக இருந்தாலும் அப்பரம்பொருள் சிவன் எந்தத் தெய்வத்தை எண்ணி வழிபட்டாலும் அருள் செய்வான்.ஓம் நமசிவாய வழிபடும் இடத்தில் அந்த நொடியில் வந்து அருள் செய்யும் பண்புடையவனாக சிவன் இருப்பான்.

இலங்கை ஒரு சிவபூமி என வர்ணித்த திருமூலர், வாக்கின் படி, அந்த நாட்டில் வாழ்பவர்கள் புண்ணியம் செய்தவர்கள் நாம் திருமந்திரம் திருமுறை ஓதுவோம்.

**வாழ்க வாழ்க என் ஞானக்குருவான நந்தியெம்**
**பெருமான் திருவடித் தாமரைகள்**
**வாழ்க வாழ்க உள்ளும் புறமும் பற்றியுள்ள**
**துன்ப வினைகளாகிய அழுக்குகளை**
**அழித்தொழித்தவன் திருவடிகள்.**
ஓம் நமசிவாய.



**க.கு.க.சிவபாலன் (K.K.K)**
**காரைநகர் ஈழத்துச்சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயப் போசகர்.**

(சி-7555)

## சீரற்ற காலநிலையால் 6,723 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இது வரை ஆயிரத்து 752 குடும்பங்களைச் சேர்ந்த ஆறாயிரத்து 723 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், தென் மாகாணத்தில் ஆயிரத்து 161 குடும்பங்களைச் சேர்ந்த நான்காயிரத்து 491 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)


**மணமகன் தேவை**

1995.இந்து. பூராடம். Doctor. யாழ்ப்பாணம். மணமகள் பதிவு இல:9872. தரகர்கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. www.EQMarriage Service. com இணையவழி திருமண சேவை. கொழும்பு04. அழையுங்கள் 076 664 9401. (சி-2161)

**மணமகள் தேவை**

1991.இந்து. சதயம். Development Officer. யாழ்ப்பாணம். மணமகன் பதிவு இல:9900. தரகர்கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. www. EQMarriage Service. com இணையவழி திருமண சேவை. கொழும்பு04. அழையுங்கள் 076 664 9401. (சி-2161)

**மணமகள் தேவை**

1988.இந்து. உத்தரம். IT Supporter Specialist. டென்மார்க். மணமகன் பதிவு இல:9870. தரகர்கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. www. EQMarriage Service. com இணையவழி திருமண சேவை. கொழும்பு04. அழையுங்கள் 076 664 9401. (சி-2161)



# இராசிபலன்

**05.11.2023**
**ஐப்பசி 19, ஞாயிற்றுக்கிழமை**
**அட்டமி பின்னிரவு 5.05 மணிவரை**
**பூசம் பிற்பகல் 12.59 மணிவரை**


**சுபநேரம் -9.04-10.34 மணிவரை**
**இராகுகாலம்-4.34-6.04 மணிவரை**

**சந்திராஷ்டமம்-**
**மூலம், பூராடம்.**

**வளவன்**





பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளை நீங்களும் வாங்க முற்படுவீர்கள், சுபசெய்திகள் வந்து சேரலாம்.





குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்,அரசு வழியில் அனுகூலம் உண்டு, போசன சுகமுண்டு.




இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், புதிய நட்பால் பொருளாதார நிலை உயரும் வாய்ப்புண்டு.





குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.





திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், விரயங்கள் கூடும் நாள்.




குடும்பத்தில் உறவினர்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு




ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்,செய்தொழில் மேன்மையுண்டு, எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.





எதிர்பார்த்த காரியம் ஒன்று நடைபெறும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், ரோக பயமுண்டு.




திட்டமிட்ட காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும், காரிய அனுகூலமுண்டு.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.




வியாபார விருத்தி உண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ஒன்றுபட்டால் வாழ்வு ஒற்றுமை நீங்கில் தாழ்வு.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பொது நிர்வாக அமைச்சினால் கிராம அலுவலர் அலுவலகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட இந்த வருடத்திற்கான முகாமைத்துவ போட்டியில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நெல்லியடி ஜே 376 கிராமஅலுவலர் பாலசுப்ரமணியம் வைகுந்தன் தேசிய மட்டத்தில் பத்தாவது இடத்தை பெற்றுள்ளார். (பம் -மகாலிங்கம்)



யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களில் கண்பார்வை குறைபாடுடைய பொலிஸாருக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாண பொலிஸ் நிலைய கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்: கஜிந்தன்)






#### தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கான
## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்யிற்சி அதிகார சபையானது 2023 ஆம் ஆண்டுக்கான NVQ சான்றிதழ் முழுநேர கற்கை நெறிகளை எதிர்வரும் 01.01. 2024 ஆம் திகதி அனைத்து பயிற்சி நிலையங்களிலும் ஆரம்பிக்கவுள்ளது.

இதன்படி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், கணினிபட வடிவமைப்பாளர், முன்பள்ளி ஆசிரியர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், மின்னிணைப்பாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வமைப் பாளர, அலுமினியம் பொருத்துநர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், வெதுப்பாளர், சமையலாளர், வரவேற்பாளர், கணினி வன்பொருள் திருத்துநர், கணினி பிரயோக உதவி யாளர், குழந்தை பராமரிப்பாளர், நீர்க் குழாய் பொருத்துநர், உதவி கணிய அளவியளாளர் (AQS) போன்ற கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

இக்கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில்த் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சி நெறிகளாகும். கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை இம் மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலு வலகம் 4ஆம் மாடி வீரசிங்கம் மண் டபம், இல .124 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது எமது பிரதேச தொழிற். பயிற்சி நிலையங்களிலும் மேற் கொள்ளமுடியும்.

விண்ணப்பங்களை பெற்றுக் கொள் வதற்கு 021 2227949, 021 221 1793, 021 205 7047, 021 226 2550, 071 031 8737, 077 716 1955 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டும் மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளமுடியும் என தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (நி)

## சனத்தொகை மதிப்பீட்டு பணிகளில் இருந்து விலகும் கிராம அலுவலர்கள்?

(கொழும்பு)

சனத்தொகை மற்றும் வீட்டு வசதிகள் மதிப்பீட்டு பணிகளில் ஈடுபடுவதற்காக உரிய கொடுப்பனவு வழங்கும் வரையில் அந்த பணிகளில் இருந்து விலகுவதற்கு கிராம உத்தியோகத்தர்கள் தீர்மானித்துள்ளனர்.

இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் கமல் கித்சிறி இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஏனைய கிராம உத்தியோகத்தர்களின் சங்கங்களும் ஆதரவு வழங்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

10 வருடங்களுக்கு ஒரு முறை முன்னெடுக்கும் சனத்தொகை மற்றும் வீட்டு வசதிகள் மதிப்பீட்டு பணிகள் இந்த மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 413
Viber 076 636 3378



# ஹமாஸ் பிடியில் பணயக் கைதிகள், கொல்லப்படும் பாலஸ்தீனக் குழந்தைகள், போர்க்குற்றம் செய்கிறதா இஸ்ரேல்?

இஸ்ரேல் இராணுவத்துக்கும் பாலஸ்தீனத்தைச் சேர்ந்த ஹமாஸ் போராளிக் குழுவுக்கும் இடையே ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடங்கிய போர், மூன்று வாரங்கள் கடந்தும் தீவிரம் குறையாமல் நடந்துகொண்டிருக்கிறது. பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் பேரழிவை ஏற்படுத்தும் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருக்கிறது இஸ்ரேல். அங்கிருக்கும் லட்சக்கணக்கான மக்கள் உணவு, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை உதவிகள்கூட கிடைக்காமல் தவித்துக்கொண்டிருக்கின்றனர். வான்வழித் தாக்குதலைத் தொடர்ந்து, தற்போது தரைவழியாகவும் தாக்கத் தொடங்கியிருக்கிறது இஸ்ரேல் இராணுவம். அடுத்த கட்டத்துக்குச் சென்றிருக்கும் இந்தப் போரில் என்ன நடக்கிறது?

## காசாவுக்குள் புகுந்த இஸ்ரேல் படை

ஹமாஸ் படை நடத்திய வான்வழித் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க, பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் வான்வழியாக சக்திவாய்ந்த ஏவுகணைகளையும் விமானப்படை மூலம் குண்டுமழையும் பொழிந்து பதிலடி கொடுத்து வந்தது இஸ்ரேல் இராணுவம். கடந்த 15 நாட்களாகவே 'காசாவின் வடக்குப் பகுதியில் தரைவழித் தாக்குதல் நடத்தவிருக்கிறோம். அங்கிருக்கும் மக்கள் அனைவரும் தெற்கு நோக்கிச் செல்லவும்' என்று எச்சரித்து வந்தது இஸ்ரேல்.

இந்த நிலையில் கடந்த ஒக்டோபர் 27 ஆம் திகதி இரவில், திடீரென காசாவுக்குள் நுழைந்து தாக்கத் தொடங்கியது இஸ்ரேல் படை. "தீய சக்திகளின் கோட்டைக்குள் இஸ்ரேல் நுழைந்திருக்கிறது. இனி இந்தப் போர் நீண்டதாகவும் கடினமானதாகவும் இருக்கும்" என்றார் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு. இதுவரை இந்தப் போரில், இஸ்ரேல் தரப்பில் சுமார் 1,400 பேரும் பாலஸ்தீனத்திலிருந்து 8,000 இற்கு அதிகமானோரும் கொல்லப்பட்டிருக்கின்றனர். இஸ்ரேல் இராணுவத்தால் கொல்லப்பட்ட 8,000 பேரில் 3,000 பேர் குழந்தைகள் எனக் கூறப்படுகிறது.

## இனப்படுகொலை செய்யும் இஸ்ரேல்?

தரைவழித் தாக்குதல் தொடங்கியதிலிருந்து காசாவில் தொலைபேசி, இணைய சேவைகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. "போர் நிறுத்தம் கொண்டுவர வேண்டும் என உலக நாடுகள் முயன்று கொண்டிருக்கும் நிலையில், இஸ்ரேல் இந்தப் போரை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இஸ்ரேல் பணயக்கைதிகளை ஹமாஸ் விடுவிக்க வேண்டும். இஸ்ரேல் போரை நிறுத்த வேண்டும்" என ஐ.நா பொதுச்செயலாளர் ஆண்டனியோ குட்டரெஸ் தெரிவித்திருக்கிறார்.

> **பாலஸ்தீனத்தில் அடுத்த தலைமுறையினரே இருக்கக் கூடாது என்ற நோக்கத்துடன், இனப் படுகொலை செய்து கொண்டிருக்கிறது இஸ்ரேல். அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் பேராதரவு இருப்பதால், சர்வதேசச் சட்டங்களை மீறிக் கொண்டிருக்கிறது இஸ்ரேல் இராணுவம்.**



பாலஸ்தீனத்தில் அடுத்த தலைமுறையினரே இருக்கக் கூடாது என்ற நோக்கத்துடன், இனப் படுகொலை செய்துகொண்டிருக்கிறது இஸ்ரேல். அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் பேராதரவு இருப்பதால், சர்வதேசச் சட்டங்களை மீறிக்கொண்டிருக்கிறது இஸ்ரேல் இராணுவம்

## 'போர்க்குற்றம் புரிகிறது இஸ்ரேல்'

இஸ்ரேல் நடத்தும் தரைவழித் தாக்குதலுக்கு கடும் எதிர்ப்பைப் பதிவுசெய்திருக்கும் துருக்கி ஜனாதிபதி எர்டோகன், "இஸ்ரேல் மிகப்பெரிய போர்க் குற்றங்களை நிகழ்த்திக்கொண்டிருக்கிறது" என்று கண்டனம் தெரிவித்திருக்கிறார். இதனால் ஆத்திரமடைந்த இஸ்ரேல், இஸ்ரேலுக்கான துருக்கியின் தூதரக அதிகாரிகளைத் திருப்பி அனுப்பியிருக்கிறது. எந்தப் போரின்போதும் கருத்து தெரிவிக்காத செஞ்சிலுவைச் சங்கம்கூட, "குண்டு வீச்சுகள், இராணுவ முற்றுகைகளுக்கு நடுவே வெளியேற முடியாமல் 20 இலட்சம் மக்கள் காசாவில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். அங்கு ஏற்றுக் கொள்ள முடியாத அளவில் நடக்கும் கொடூரங்களை உலகம் பொறுத்துக்கொள்ளக் கூடாது. இந்தப் பேரழிவை உடனடியாக நிறுத்த வேண்டும்" என்றிருக்கிறது.

ஐ.நா பொதுச்சபையில், "காசாவில் உடனடிப் போர் நிறுத்தம் வேண்டும்" என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தது ஜோர்டன் அரசு. இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 120 நாடுகளும் எதிராக 14 நாடுகளும் வாக்களித்தன. இந்தியா, உக்ரைன் உள்ளிட்ட 45 நாடுகள் இதில் வாக்களிக்காமல் தவிர்த்தன.

## பணயக் கைதிகள்

ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலில் தாக்குதல் நடத்தியபோது, 200 இற்கும் அதிகமானோரை பணயக்கைதிகளாகப் பிடித்துச் சென்றது ஹமாஸ். அவர்களில் நான்கு பேரை மட்டும் மருத்துவக் காரணங்களுக்காக விடுதலை செய்திருக்கிறது. மீதமுள்ளவர்களையும் விடுவிக்க வேண்டும் எனப் பல்வேறு உலக நாடுகளும் கோரிவருகின்றன.

இந்த நிலையில், 'ஹமாஸ் குழுவுடன் மத்தியஸ்தம் பேசி பணயக்கைதிகளை விடுதலை செய்ய உதவுமாறு' கட்டாரை நாடியிருக்கிறது இஸ்ரேல். ஹமாஸின் அரசியல் பிரிவுடன் நெருக்கம் காட்டிவரும் கட்டார், பிணைக்கைதிகளை விடுவிப்பதற்கான முயற்சிகளைத் தொடங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. தரைவழித் தாக்குதல் தொடங்கியிருப்பதால் பிணைக் கைதிகளின் குடும்பத்தினர் அச்சத்தில் ஆழ்ந்திருக்கின்றனர்.

— ஜுனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் கங்காணி கார்த்திகேயனைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். ஓய்வுபெற்ற அதிபர் பாலசிங்கம் வெற்றிவேல் அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம். அல்வாயைச் சேர்ந்த ஓய்வுநிலை அதிபர் வெற்றிவேல் ஒரு நல்ல மனிதர். எல்லோரிடத்திலும் அன்பாகப் பழகுபவர். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி, இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அவர் யாழ்.பொது நூலகத்திற்குச் சென்ற போது, அங்கு வைக்கப்பட்டிருந்த யாழ் இசைக் கருவியைப் பார்த்தார்.

அதனைப் பார்த்த அவர், யாழ் என்ற இசைக்கருவியைச் செய்பவர்கள் இங்கு இருக்கிறார்களா?

அந்த இசைக்கருவியை இசைக்கத் தெரிந்தவர்கள் உள்ளனரா? என்று கேட்டார்.

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் கேள்விக்குள் மிகுந்த கருத்துண்டு. அதாவது யாழ் இசைக்கருவியைக் காட்சிப்படுத்திறதாக இருந்தால், அந்தக் கருவி நடைமுறையில் இல்லாமல் போய் விட்டது என்பது ஒரு பொருள்.

மற்றையது யாழ் என்ற இசைக்கருவியுடன் யாழ்ப்பாணம் தொடர்பு பட்டதாயின், இங்கிருப்பவர்கள் அனைவரும் அந்த இசைக் கருவியை வாசிக்கின்ற திறனைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையாயின் அந்த நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன என்பதான பொருள் அடங்கியுள்ளது.

**வாத்தியார்:-** நாங்களும் எத்தனையோ கலை நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறம். ஆனால் ஒரு மேடையில் கூட, யாழ் இசைக் கருவியை தனித்து இசைக்கின்ற நிகழ்ச்சி நடத்தப்படவில்லை.

ஏன்? யாழ் இசைக் கருவியை இலட்சனையில கண்டால் ஒழிய அதனை ஒரு வாத்திய இசைக்கருவியாக யாரும் வீடுகளில் பேணிப் பாதுகாக்கவில்லை என்பது தான் உண்மை.

**மூப்பர்:-** ஓ! யாழ்ப்பாணத்தில காணமல் போறது அதிகம் தானே.

அந்தப்பட்டியலில யாழ் இசைக் கருவி முன்னிலையில இருக்குது.

**சாத்திரியார்:-** எங்களிட்ட இருக்கிற மிகப் பெரிய குறைபாடு ஆவணப்படுத்துறதில நாங்கள் கவனம் செலுத்திவதில்லை.

அதுபோல எங்கட தமிழ் மக்களின் வாழ்வியலோடு சேர்ந்திருந்த எத்தனையோ பொருட்களை நாங்கள் பக்குவப்படுதாமலும் பாதுகாக்காமலும் விட்டு விட்டோம்.

இவ்வாறு சாத்திரியார் சொல்லி முடிப்பதற்குள் அவசரப்பட்ட சிறாப்பர் கனகசபை; சாத்திரியார் சொல்லுறது நூறுவீதம் உண்மை. எங்கட வாழ்வியலில் எத்தனையோ பித்தளைப் பாத்திரங்களும் செப்புப் பொருட்களும் பயன்படுத்தப்பட்டன.

ஆனால் அவற்றை நாங்கள் பேணிப்பாதுகாக்காமல் அவற்றை விற்றுப் போட்டு, சில்வர் பாத்திரங்களையும் பிளாஸ்ரிக் பொருட்களையும் வாங்கினம்.

இப்ப அந்த பித்தளைப் பொருட்களை எங்களிட்ட அறாவிலைக்கு வாங்கினவையள் அவற்றுக்கு முலாம் பூசிப்போட்டு எங்களிட்டக் கொண்டு வந்து அருங்கலைப் பொக்கிஷத்தின்ர விலைக்கு விற்கினம். அதுகளைப் பார்த்து அட! இப்படியும் பொருட்கள் இருக்குதோ எண்டு நாங்கள் பிரமிக்கிறம்.

என்ன செய்யிறது. எங்களிட்ட இருந்த பொருட்களை நாங்களே விற்றுத் தீர்த்துப்போட்டு, இப்ப பிளாஸ்ரிக்கோட வாழ்க்கை நடத்துகிற பரிதாபத்திற்கு ஆளாகிற்றம்.

இவ்வாறு சிறாப்பர் கூற, அந்நேரம் பார்த்து கங்காணி கார்த்திகேயன் காலை நொண்டியபடி ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

**பண்டிதர்:-** என்ன கங்காணியார் காலில என்ன நடந்தது.

**கங்காணி:-** அதையேன் கேட்கிறியள். யாழ்ப்பாணத் தேர்தல் திணைக்களத்திற்குப் போனனான். பழைய பூங்கா வளாகத்தில யாழ்ப்பாணத் தேர்தல் திணைக்களத்திற்கு நல்ல கட்டடம் கட்டியிருக்கினம்.

ஆனால் அந்தத் தேர்தல் திணைக்களத்திற்குப் போறதுக்குப்பாதை இல்லை. ஏதோ ஒரு பாதையைப் பிடித்துப் போனால், அது சேறும் சகதியுமாக இருந்தது. அதில சறுக்கி விழுந்து போனன்.

**வாத்தியார்:-** நல்ல காலம் பாதையில சறுக்கி விழுந்தியள். எத்தனையோ பேர் தேர்தல் திணைக்களத்தில கட்டுப் பணம் செலுத்திப் போட்டு சறுக்கி விழுந்திருக்கினம்.

இவ்வாறு வாத்தி யார் கூற, ஆலடியில் சிரிப்பொலி எழுந்தது. சிரிப்பொலியை ஊடறுத்த சாத்திரியார் சதாசிவம்; அது சரி தேர்தல் திணைக்களத்திற்கு ஏன் போனனீங்கள்.

**கங்காணி:-** என்ர பேரனுக்கு வாற மாதம் 18 வயது நிறைவடையுது. எங்கட யாழ். மாவட்டத் தேர்தல் திணைக்களம் 2024 ஆம் ஆண்டிற்கு முன்னதாக 18 வயதைப் பூர்த்தி செய்பவர்களை வாக்காளர் இடாப்பில சேர்க்கிறதுக்கு அவரவர் வீடுகளுக்குப் படிவம் அனுப்புகினம்.

அந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்து விதானையாரிட்ட கையெழுத்து வேண்டி தேர்தல் திணைக்களத்தில ஒப்படைப்பம் எண்டு தான் அங்க போனனான்.

**சிறாப்பர்:-** உண்மையில 18 வயது நிறைவடைகிற பிள்ளைகளை வாக்காளர் இடாப்பில சேர்க்கிறது நல்ல வேலை. இதனை எங்கட மக்கள் பொறுப்போட செய்தாக வேணும்.

இவ்வாறு சிறாப்பர் கூற, விதானையார் விசுவலிங்கம் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தார்.


இதனை அவதானித்த கங்காணி கார்த்திக்கேயன், என்ன விதானையார் கடுமையாக யோசிக்கிறியள். என்ன சங்கதி என வினவினார்.

**விதானையார்:-** நாவற்குழியில உள்ள திருவாசக அரண்மனைக்கு அருகில மத மாற்ற சபையொன்று வழிபாட்டுத் தலம் அமைக்குதாம் அது தான்...

**பண்டிதர்:-** இனி இதுதான் நடக்கப் போகுது. எங்கெல்லாம் சைவாலயங்கள் இருக்குதோ அதற்கு அருகில மதமாற்ற சபைகள் கட்டடம் கட்டுவினம். இருந்து பாருங்க இதுதான் நடக்கப்போகுது.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**



## யாழ் இசைக்கருவி இல்லாத யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல்

372

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# தற்கொலை எண்ணங்களை வெற்றி கொண்டு வாழ்வை நேசிக்க...


இன்றைய இளம்பிராயத்தினர் தம் வாழ்வை நேசிக்காமல், பிழையான முடிவுகளை எடுத்து, தங்கள் உயிர்களை மாய்த்துக் கொள்கின்ற அவலத்தை அதிகமாக காணக்கூடியதாக இருக்கின்றது. இளம் பிராயத்தினரின் இழப்புகள், எமது சமூகத்தை பெருமளவு பாதிக்கின்றது.

குறிப்பாக, இளம் பிள்ளைகள் தங்களது கல்வி பிரச்சினை, பரீட்சைகளில் ஏற்படும் பிரச்சினை, உறவுகளில் ஏற்படும் பிரச்சினை, போதைப் பொருட்களுக்கு அடிமையாதல் போன்ற பல்வேறு விடயங்கள் காரணமாக பிழையான முடிவுகளை எடுத்து தங்கள் உயிர்களை மாய்த்துக் கொள்கின்ற நிலைமை இன்று அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்த இளம் பிராயத்தினர் ஏன் இவ்வாறு செய்கிறார்கள்? இளம் வயதிலே ஏன் தங்கள் வாழ்வை நேசிக்க மறுக்கிறார்கள்? என்ற யோசனை நம்மில் பலருக்கு இருக்கலாம். வாழ்வை நேசிப்பதென்பது, வெறுமனே சுயநலம் சார்ந்த விடயமல்ல. உண்மையில் சுயநலமானவர்கள் தம் வாழ்வை நேசிப்பதில்லை. வாழ்வை நேசிப்பதென்பது ஒரு கலை ஆகும். வாழ்வை நேசிப்பதற்காக நாம் எமது பிள்ளைகளை தயார்ப்படுத்த வேண்டும் அல்லது அதற்கான அறிவை அவர்களுக்கு ஊட்ட வேண்டும்.

முக்கியமாக பிள்ளைகள் தங்கள் வாழ்வை நேசிக்கும் விடயத்தில் பெற்றோரின் பங்கு அதிகமாக இருக்கிறது என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. அதனைத் தொடர்ந்து ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தினரின் பங்கும் மிக முக்கியமாகும். பொதுவாக ஓர் ஆரோக்கியமான குடும்பச் சூழலானது, பிள்ளைகள் தம் வாழ்வை நேசிக்க அடித்தளம் இடுகிறது என கண்டறியப்பட்டுள்ளது.

ஆகவே, ஆரோக்கியமான குடும்பச் சூழலை உருவாக்குவதன் மூலம் பிள்ளைக்கு தம் வாழ்வை நேசிக்க கற்றுக் கொடுக்கலாம். உதாரணமாக, 13 - 15 வயதுடைய கட்டிளமைப் பருவத்தினர், தம் பெற்றோரின் ஆதரவினால் தம் வாழ்வை நேசிக்க பழகுகின்றனர் என பல ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.



குடும்பத்துடனான ஆரோக்கியமான உறவு முறை, தொடர்பாடல் போன்றவற்றால், பிள்ளைகள் தம் வாழ்வில் தன்னம்பிக்கையை வளர்த்து தம் வாழ்வை நேசிக்க ஆரம்பிக்கின்றனர்.

இது பெற்றோரின் மிக முக்கிய கடமைகளில் ஒன்றாகும். பாடசாலைக்கு அல்லது பல்கலைக் கழகத்திற்குச் செல்லும் இளம் பிராயத்தினர், தம் வாழ்வை நேசிப்பதற்கு அந்த நிறுவனங்கள் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். இன்றைய நிலையில் 15-29 வயதான இளம்பிராயத்தினர் தம் உயிரை மாய்த்துக் கொள்கின்ற நிலைமை அதிகரித்துக் காணப்படுகின்றது.

பொதுவாக குடும்பத்தில் நிலவும் சச்சரவுகள், உறவுகளுக்கிடையிலான முரண்பாடுகள், வன்முறை சார்ந்த சம்பவங்கள், பெற்றோரின் குடி அல்லது போதைப் பழக்கம் மற்றும் பெற்றோர் தங்களுக்கிடையில் முரண்படுவதோடு, குழந்தைகளுடன் நேரத்தை செலவழிக்காமல், தம் ஆதரவை அவர்களுக்கு காட்டாமல் இருத்தல் போன்றவையே, இந்த தற்கொலை பிரச்சினைகளுக்கு காரணங்களாக அமைகின்றன.

தற்கொலை எண்ணம் என்பது சாதாரணமான ஒன்றாகும். உலகில் பெரும்பாலான மக்கள் தற்கொலை எண்ணங்களிற்கு உட்படுகின்றனர். ஆனால், அவர்கள் எல்லோரும் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்வதில்லை. ஓர் எண்ணம், ஓர் செயற்பாடாக மாற்றமடைவதற் கிடையில் பல விடயங்கள் நடை பெறுகின்றன.

பலருக்கு தற்கொலை எண்ணம் இருந்தாலும் கூட, அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் விடயங்கள் நடைபெறுகின்ற போது, அவர்கள் தற்கொலை எண்ணத்தில் இருந்து முற்றாக விடுபடுகின்றனர். இத்தகைய எண்ணங்கள் அகக் காரணிகளாலும் வரலாம், புறக்காரணிகளாலும் வரலாம். அகக் காரணிகளால் இத்தகைய எண்ணங்கள் வருவதற்கு, பெரும்பாலும் மனநல குறைபாடுகள் அல்லது மன நோய்கள் காரணமாக அமைகின்றன.

அதேபோல், வெளிப்புற அழுத்தங்கள் அல்லது பிரச்சினைகளும் தற்கொலை எண்ணம் தோன்ற முக்கியமான காரணிகளாகும். இவற்றை தாங்குவதற்கு, ஒவ்வொரு மனிதனும் ஒரு வகை தாங்கு திறன் பெற்றவனாக இருக்க வேண்டும். அதேபோல் இவ் எண்ணங்களை வெற்றி கொள்ள, தம்மைச் சார்ந்தவர்களின் ஆதரவை பெற்றிருக்க வேண்டியதும் அவசியம். இந்த ஆதரவை பெற்றோர்களும் மற்றவர்களும், இளம்பிராயத்தினருக்கு வழங்க வேண்டியது மிக அவசியம்.

மாணவர்களில் பலர் விரக்தியுற்று, வேதனையுற்று, வாழ்க்கையில் மற்ற தெரிவுகள் ஏதுமற்ற நிலையில் தற்கொலை முயற்சிக்கு செல்வது துர்ப்பாக்கியமான ஒரு நிலை ஆகும். ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் பத்தாம் திகதி, தற்கொலை தடுப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் முக்கிய குறிக்கோள் நம்பிக்கையூட்டுதல் ஆகும். இந்த நம்பிக்கையை வெறும் வார்த்தைகளால் மட்டும் விதைத்து விட முடியாது நமது செயல்களாலும் ஏற்படுத்துவதன் மூலமே தற்கொலைகளை தடுக்க முடியும்.

ஆகவே, இளம் பிராயத்தினரின் இத்தகைய துர்ப்பாக்கிய நிலையை தடுப்பதற்கு சமூக அங்கத்தவர்களாக நாம் அனைவரும் பங்களிக்க வேண்டும். இன்றைய நிச்சயமற்ற உலகில், இளம்பிராயத்தினர் நம்பிக்கையை இழப்பதற்கான சந்தர்ப்பம் மிக அதிகமாகும்.

எனவே, அனுபவம்மிக்க, அறிவுள்ள பெரியவர்கள் , பிள்ளைகளுக்கு தங்களுடைய செயற்பாடுகள் மூலம் நம்பிக்கையூட்ட வேண்டும். அவர்களுக்கு அத்தகைய நம்பிக்கை ஏற்படும் போது தான் தம் வாழ்வை இரசிக்கிறார்கள். இளம் பிராயத்தினர் வாழ்வை நேசிப்பதென்பது, அவர்களது முக்கியமான ஆற்றலாகும். எனவே, வாழ்வை நேசிப்போம் நேசிக்கச் செய்வோம்.

Dr. S. சிவதாஸ்
உள மருத்துவ நிபுணர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடின உழைப்பே இலட்சியத்தை நிறைவேற்றும்

## விஞ்ஞானி கலாநிதி T.மதனராஜன்

**சமீபத்தில் Elsevier மற்றும் Stanford (ஸ்ரான்போட்) பல்கலைக்கழகத்தால் வெளியிட்ட 2022 ஆம் ஆண்டுக்கான தலைசிறந்த விஞ்ஞானிகளின் முதல் இரண்டு வீதத்தினரிற்கான பட்டியலில் இடம்பிடித்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணிதத்துறை விரிவுரையாளர் கலாநிதி. T.மதனராஜனை அவரது இல்லத்தில் சென்று வலம்புரி சார்பாக சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தோம். அவருடனான சந்திப்பின் போதான உரையாடல் இங்கு நேர்காணல் வடிவில் பிரசுரமாகிறது. (ஆ-ர்)**



**உங்களுடைய ஆரம்பக்கல்வி பற்றி சிறிது கூறுங்கள். குறிப்பாக கணிதத்தின் மீதான ஈர்ப்பு எந்தக் காலத்தில் ஏற்பட்டது? இதில் உங்களது பாடசாலை மற்றும் குடும்பச்சூழல் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தின?**

புற்றளை கிராமத்தில் பிறந்து வளர்ந்த நான், அங்கேயுள்ள புற்றளை மத்திய மகா வித்தியாலயத்தில் எனது ஆரம்பக்கல்வியை கற்றேன். சிறுவயதிலிருந்தே எனக்கு கணிதத் தின் மீது ஆர்வம் ஏற்படத் தொடங்கியது. குறிப்பாக எனது தாய்வழிப் பாட்டனார் ஒரு ஆசிரியராவார். அவர் ஊடாகவே எனக்கு கணிதப் பாடத்தில் ஆர்வம் ஏற்பட்டது. தவிர, ஆரம்பப்பள்ளியிலும் மற்றும் ஹாட்லி கல்லூரியிலும் எனக்கு கணித பாடத்தைப் போதித்த ஆசிரியர்களின் ஊக்கமும் உந்துதலும் ஒரு காரணமாகும்.

**உங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி, அதன் பின்னரான பேராதனைப் பல்கலைக்கழகம்- NIFS இல் மேற்கொண்ட கலாநிதி பட்டத்திற்கான ஆய்வு என்பவை பற்றி சிறிது கூறுங்கள். எப்போது முறையாக கணித ஆய்வில் ஈடுபட தொடங்கினீர்கள்? இதில் உங்களை வழி நடத்தியவர்கள் யார்?**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2008 ஆம் ஆண்டு விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தை கணிதத்தில் பெற்றேன். தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு மேற்படிப்பிற்காக (கலாநிதிப் பட்டத்திற்காக) பேராதனைப் பல்கலைக்கழகம் சென்றேன். அங்கு மேற்படிப்பைத் தொடர்ந்து கொண்டிருக்கும் போது அடிப்படைக் கற்கைகளுக்கான தேசிய நிலையம் (NIFS) மற்றும் City university of London என்பவற்றில் ஆய்வுகளை மேற்கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. முறையாக ஒரு ஆய்வொன்றினை மேற்கொள்வதற்கான அடிப்படைத் தளத்தை வகுத்து NIFS உம் அங்கு எனது Supervisor ஆக இருந்த பேராசிரியர் ஆசிரிநாயக்காரவுமே. மேலும் Erasmus Mundus புலமைப்பரிசில் City university of London இல் எனது ஆய்வைத் தொடர்ந்த போது அங்கு எனது Supervisor ஆக இருந்த பேராசிரியர் Andreas Fring உம் எனது ஆய்வுகளுக்கு நல்லதொரு அடித்தளத்தை இட்டார்.

**கணித ஆய்வியலாளராக (ஆராய்ச்சியாளராக) இதுவரை உங்களிற்குக் கிடைத்த அங்கீகாரங்கள், பட்டங்கள் என்பவற்றைச் சிறிது கூறுங்கள்.**

மிக முக்கியமான விருதுகளாக,

1.Presidentral award for Scientific Publication - 2012

2.Merit NRC award for Scientific Publication -2013

3. Association of scientists, Developers and faculties (ASDF) award for Best Scientific Researcher - 2015

என்பவற்றைக் கூறுவேன்.

**முதல் முதலாக உங்களுடைய ஆய்வுக்கட்டுரையொன்று சர்வதேச ஆய்வேடு ஒன்றில் எப்போது வெளியானது? அப்போது எவ்வாறான மனோநிலையில் இருந்தீர்கள்?**

எனது கலாநிதிப் பட்டத்திற்காக நான் NIFS இல் ஆய்வை மேற்கொண்டிருந்த போது சர்வதேச ஆய்வேடாகிய Physical Review D இல் 2012 ஆம் ஆண்டு எனது முதல் ஆய்வுக் கட்டுரை வெளிவந்தது. இது அமெரிக்காவின் பிரசித்தி பெற்ற விஞ்ஞான ஆய்விற்கான தரப்படுத்தப்பட்ட (indexed) ஒரு ஆய்விதழ் என்பதால் மிகவும் மகிழ்ச்சியடைந்ததோடு இன்னும் பல ஆய்வுக் கட்டுரைகளைப் பிரசுரிக்க வேண்டும் என்ற ஆர்வமும் ஏற்பட்டது. எனது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுகளை மேற்கொண்டிருந்த காலத்தில் (2011-2014) ஏழு ஆய்வுக்கட்டுரைகள் சர்வதேச indexed Journal இல் பிரசுரித்திருந்தேன்.

**உங்களுக்கு கணிதவியல் ஆய்வு தவிர வேறு ஏதாவது ஈடுபாடு உண்டா? அவை பற்றி சொல்லுங்கள்?**

ஆம், கரப்பந்தாட்டம் மற்றும் மென்பந்து போன்ற விளையாட்டுக்களை பொழுது போக்கிற்காக விளையாடுவேன். ஆனாலும் பெரும்பாலான நேரங்களை கணிதவியல் ஆய்விற்காகவே செலவழிப்பேன்.

**நீங்கள் ஒரு கணித விரிவுரையாளராக இருக்கிறீர்கள். ஆசிரியராக உங்கள் வேலைச்சுமை மற்றும் குடும்பப் பொறுப்புகள் இவற்றின் மத்தியில் ஆய்வில் ஈடுபடுவதற்கு எவ்வாறு நேரம் ஒதுக்குகிறீர்கள்? ஆசிரியராக இருந்து கொண்டே ஆய்விலும் ஈடுபடுவதில் அனுகூலங்கள் உள்ளனவா?**

ஆய்வு என்பது எமது தொழிலின் ஒரு பகுதியாக இருக்கிறது. பொதுவாக நான் எனது விரிவுரைகளை காலை வேளையில் நிறைவு செய்துவிட்டு மாலை நேரங்களை ஆய்விற்காக ஒதுக்குவேன். மாலை நேரங்கள் அமைதியாகவும் இடையூறற்றவையாகவும் இருப்பதனால் எனது அலுவலகத்திலிருந்து ஆய்வுகளை மேற்கொள்ள சிறந்த நேரமாக இருக்கிறது.

ஆசிரியராக இருந்து கொண்டே ஆய்விலும் ஈடுபடுவதால் பல நன்மைகள் உண்டு. குறிப்பாக எமது அறிவைப் புதுப்பித்து அதை மாணவர்களுக்கு போதிக்கலாம்.

**வடக்கு - கிழக்கு மாகாணங் களில் பொதுவாக கணிதத்தை உயர்தரத்தில் கற்கும், கற்க விளையும் ஒரு மாணவனின் இலட்சியம் ஒரு பொறியியலாளராக வருவதாகவே இருக்கும். குறிப்பாக பௌதீக விஞ்ஞானத் துறை பற்றி அதுவும் கணிதம் போன்ற அதன் துறைப்பிரிவுகள் குறித்து நமது சமூகத்தின் பொதுப்புத்தியில் ஒருவிதமான அலட்சிய மனோபாவமே இருக்கிறது. ஆனால் நீங்கள் கணிதத்துறையிலேயே சாதனையாளராக சர்வதேச கவனம் பெற்றிருக்கிறீர்கள். நமது பாடசாலை மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் எவ்வாறான அறிவுரை கூற விரும்புகிறீர்கள்?**

உயர்தரத்தில் கணிதத் துறையை தேர்ந்தெடுக்கும் மாணவன் ஒருவனின் இலட்சியம், பொறியியலாளராக வருவதே என்ற மனோபாவம் மாற்றப்பட வேண்டியதே. மாறாக பௌதீக விஞ்ஞானத்துறையைத் தேர்ந்தெடுத்து உயர்நிலையை அடையலாம். இதற்கு நான் மட்டுமல்ல, பலபேர் உதாரணமாக உள்ளார்கள். குறிப்பாக, அண்மையில் எம்மை விட்டுப் பிரிந்த எனது ஆசானும் முன்னைநாள் துணைவேந்தர் பேராசிரியர் விக்னேஸ்வரன், உயர்தரத்தில் கணிதத் துறையைத் தேர்ந்தெடுத்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறை கிடைத்தும் அதைத் தொடராது பௌதீக விஞ்ஞானத்துறையில் தனது படிப்பை மேற்கொண்டு பல உயர் பதவிகளை வகித்திருந்தார். ஆகவே பொறியியல் துறை மட்டுந்தான் இலக்கு என்று எண்ணாது முயற்சியும் ஈடுபாடும் இருந்தால் எந்தத் துறையிலும் சென்றும் சாதிக்கலாம்.

**உங்களிற்குக் கிடைத்த இந்த சர்வதேச அங்கீகாரம் நிச்சயமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தி ற்கும் பெருமை சேர்த்திருக்கிறது. இது போன்ற தொடர் நிழ்வுகளால் நமது பல்கலைக்கழகம் மேலும் சர்வதேச கவனத்தை எதிர்காலத்தில் பெறும் என்று நம்புகிறோம் இறுதியாக சில வார்த்தைகள் கூறுங்கள்?**

பொதுவாக மாணவர்களிடம் கடின உழைப்பும் தன்னம்பிக்கையும் இருந்தால் அவர்கள் தங்களது இலட்சியத்தை இலகுவாக அடைந்து கொள்ளலாம்.

பரமாத்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறக்கணிக்கப்படும் மன்னார் வைத்தியசாலை

## பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் சாடல்

(மன்னார்)

வடமாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்குள் மன்னார் மாவட்ட வைத்தியசாலை மிகவும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா அபிவிருத்தி குழுவின் தலைவருமான திலீபன் தெரிவித்துள்ளார்.

மன்னார் பொது வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பில்பார்வையிடுவதற்காக நேற்று முன்தினம் மாலை மன்னார் பொது வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

குறித்த விஜயத்தின் போது மன்னார் பொது வைத்தியசாலையின் உ்தவிப் பணிப்பாளர் வைத்தியர் யோகேஸ்வரனுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டதுடன் வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பில் நேரடியாகவும் பார்வையிட்டிருந்தார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

"மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள் வளப்பற்றாக் குறைகள் காணப்படுகின்ற போதிலும் பல சிரமங்களுக்கு மத்தியில் வைத்தியர்கள் மக்களுக்கு சிறந்த சேவைகளை வழாங்கி வருகின்றனர்.

ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் முன்னுரிமை அடிப்படையில் மன்னார் வைத்தியசாலையில் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வை இந்த அரசாங்கத்தில் என்னால் பெற்றுத்தர முடியும் என நான் நம்புகின்றேன்.

மேலும் இம்மாதம் மற்றும் வருகின்ற மாதத்தில் முன்வைக்கப்படவுள்ள வரவு செலவு திட்டத்தின் கூட்டங்களின் போதும் மன்னார் வைத்தியசாலையின் தீர்க்கப்படவேண்டிய மிக முக்கிய பிரச்சினைகளை ஆளமாக முன்வைத்து வைத்தியசாலையின் தேவையை நிச்சயமாக பெற்றுத்தருவேன் "என தெரிவித்தார். (நி-285)



மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதான பணிகள் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது. சிரமதானத்தின் பின்னர் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. (படம்:-ஜோசப்நயன்)

# காசா மீதான தாக்குதலை நிறுத்தக்கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



(வவுனியா)

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலை உடன் நிறுத்துமாறு வலியுறுத்தி வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கவனயீர்ப்பு போராட்டமானது வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று இடம் பெற்றது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனவழிப்பு யுத்தம் போன்று பாலஸ்தீனத்தில் அரபு மக்களுக்கு எதிராக இஸ்ரேல் இனவழிப்பு யுத்தத்தை மேற்கொண்டுள்ளது.

இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அமரிக்கா தனது ஆயுதப் பரிசோதனைக் களமாக இந்த யுத்தத்தை பயன்படுத்தக் கூடாது.. யுத்தத்தை உடன் நிறுத்த உலக நாடுகளும், ஐ.நாவும் கவனம் செலுத்த வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இதன்போது தெரிவித்தனர். (நி)

# ஆபத்தான மரத்தை அகற்றுமாறு கோரிக்கை

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுர வைத்தியசாலைக்கு அருகாமையில் 60 வருடங்களை கடந்த பாரிய ஆலமரம் முறிந்து விழும் நிலையில் காணப்படுகிறது.

சில தினங்களுக்கு முன் பெய்த மழையினால் ஒரு பகுதி முறிந்து விழுந் துள்ளது.

மேலும் இம் மரம் பழுதடைந்த நிலையில் காணப் படுவதால் இவ் வீதி ஊடாக தினமும் பயணிக்கும் மக்கள் அச்சத்துடன் செல்கின்றனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மரத்தினை அகற்று வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராமமக்கள் தெரிவித்துள்ளனர். (நி-316)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக விலைக்கு சீனி விற்பனை; வர்த்தகர்களை தேடி வலைவீச்சு

(கொழும்பு)

அதிக விலைக்கு சீனியை விற்பனை செய்யும் வர்த்தகர்களை தேடி நேற்று முதல் நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகள் நடத்தப்படும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிக விலைக்கு சீனியை விற்பனை செய்யும் வியாபாரிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, சீனிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலை நுகர்வோர் அதிகாரசபை நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதன்படி, பொதி செய்யப்படாத ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் அதிக புட்ச சில்லறை விலை 275 ரூபாவாகும். பொதி செய்யப்படாத சிவப்பு சீனி ஒரு கிலோவின் அதிக பட்ச சில்லறை விலை 330 ரூபாவாகும்.

ஒரு கிலோ பொதி செய்யப்பட்ட வெள்ளை சீனியின் அதிக பட்ச சில்லறை விலை 295 ரூபாவாகும்.

பொதி செய்யப்பட்ட சிவப்பு சீனி ஒரு கிலோவுக்கு அதிக பட்ச சில்லறை விலையாக ரூ.350 நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சீனிக்கான 25 சதம் வரியை இம்மாதம் முதலாம் திகதி முதல் 50 ரூபாவாக அதிகரிக்க நிதியமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# புத்தளத்தில் வெள்ளம் 110 பேர் பாதிப்பு



(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு முதல் பெய்த கடும் மழையினால் சுமார் 30 குடும்பங்களைச் சேர்ந்த 110 பேர் உறவினர்களின் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பெய்த கடும் மழையினால் பாலாவி குவைட் நகர், ரத்மல்யாய, நாகவில்லு ஆகிய பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இந்நிலையில் அப்பகுதியிலுள்ள பெரும்பாலான வீடுகளுக்குள் வெள்ள நீர் உட்புகுந்துள்ளது இதனால் அப்பகுதியிலுள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் புத்தளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 30 குடும்பங்களைச் சேர்ந்த 110 பேர் உறவினர்களின் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (நி)





அதிபர் தரத்திற்கு ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 401 புதிய அதிபர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று யாழ்ப்பாணம் கோப்பாயில் உள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்:-சிவசாந்தன்)

# மசகு எண்ணெய் விலை வீழ்ச்சி

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் அதிகரித்திருந்த மசகு எண்ணெயின் விலை நேற்று சற்று வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 80.51 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 84.89 அமெரிக்க டொலராக வீழ்ச்சியை பதிவாகியுள்ளது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 3.51 அமெரிக்க டொலராக நிலவுகிறது. (நி)


The 70th Annual festival of carols by the

combined choirs of schools and colleges of the North

will we held at the st.John's college Hall on Saturday 11th November 2023 at 4.00 pm

Admission: By Hymn Sheet-Rs.50/=

principal

(C-7556)



பழைய இரும்பு பொருட்கள் ஏலவிற்பனை

காலம் :- 15.11.2023 (புதன்கிழமை)

இடம் :- சித்த மருத்துவ கூட்டுறவுச் சங்கம், கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு.

ஆரம்பிக்கும் நேரம் :- காலை 11.00

உடன் பணம் செலுத்தி பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும்.

தகவல்:-தலைவர்

(17669)



ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

இடம் :- பிரதான மண்டபம்

காலம் :- 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் :- பி.ப 2.30 மணி

- 07.11.2023 தொடக்கம் அங்கத்துவப் படிவங்களைப் பெற்று புதிய அங்கத்தவர்கள் உறுப்புரிமை பெற்றுக் கொள்ளலாம்.
- 19.11.2023 பி.ப 1.30 மணிவரை புதிய அங்கத்துவப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
- அங்கத்துவ உறுப்புரிமை பெற்றுக்கொண்டவர்களே கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும்.

அனைத்து பழைய மாணவர்களும் ஒன்றிணைந்து பாடசாலையின் அபிவிருத்திக்கு கரம் கொடுக்குமாறு அழைக்கின்றோம்.

அதிபர்,

மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்.

(C-7557)



8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1952 . 11 . 21



மறைவு 2015 . 11 . 03

அமரர்.திருமதி.செல்வராசா விஜயமலர் (மலர்)

திதி: அபரபக்க அட்டமி 05.11.2023

ஆண்டு எட்டு ஆனதோ
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து...
புன்னகை பூத்த உங்கள் முகம் – என்றும்
எம் மனக்கண்ணில் நிழலாடும்

பாசமான உம் வார்த்தைகள் –என்றும்
எம்மைப் பின்தொடரும்
பசுமையான உங்கள்நினைவுகள்–என்றும்
அழியாது எம்மை விட்டு...

இல.57 பிரம்படி லேன்,
கொக்குவில்.

(17651)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தலைமைப் பண்பு என்பது தற்சார்ப்பற்று இருத்தல் நலம். தன்னலம் கருதிய தலைமை இன்றைய நிலைமையில் நிர்வாகத்தை தலைகீழாக மாற்றும் வல்லமை கொண்டது. ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர் நாம் யாரொடு நோவோம் யார்க்கெடுத்து உரைப்போம்

இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் வருகை தந்திருந்தார்.

திருகோணமலையில் திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கு சென்று தரிசித்த அம்மையார் பாடல் பெற்ற திருத்தலத்தின் வரலாற்றைக் கேட்டறிந்தார்.

தவிர, இந்தியா திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை பெருங்கோயிலாகப் புனரமைத்துத் தரும் என்ற உத்தரவாதத்தையும் அவர் வழங்கியுள்ளார்.

அந்தவகையில் திருக்கோணேஸ்வரர் ஆலய நிர்வாகம் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் வருகையை சாதகமாக்கியுள்ளது.

ஆனால் யாழ்ப்பாணத்துக்கு அவர் வருகை தந்தபோது அவரிடம் கோரிக்கைகள் எதனையும் முன்வைப்பதற்கு நாம் தயாராக இருக்கவில்லை.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் வைத்து அவர் எந்த உறுதிமொழியையும் உத்தரவாதத்தையும் வழங்கவில்லை.

கடைசி, இந்தியப் பல்கலைக்கழகங்களில் எங்கள் தமிழ் மாணவர்கள் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான புலமைப்பரிசில் திட்டங்களை இன்னும் அதிகரித்து வளப்படுத்துங்கள் என்றேனும் கேட்டிருக்கலாம்.

இவை ஒருபுறமிருக்க, இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஜனாதிபதியை, பிரதமரைச் சந்தித்ததுடன் கண்டியில் அஸ்கிரிய பீடாதிபதியையும் சந்தித்தார்.

ஆனால் தமிழ் அரசியல் தரப்புகளை அவர் சந்திக்கவில்லை என்பதுதான் இங்கு ஈண்டு கவனிக்கத்தக்க விடயம்.

ஆம், இந்திய மத்திய நிதியமைச்சரின் இலங்கை வருகையின் நோக்கம் மலையகத் தமிழ் மக்களுக்கான வீட்டுத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பதாக இருந்தாலும் ஜனாதிபதியை, பிரதமரை, அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்திக்கும்போது, தமிழ் அரசியல் தரப்புக்களையும் சந்திப்பது நியாயத்துவமானது.

இருந்தும் அவ்வாறானதொரு சந்திப்பு அறவே நடைபெறவில்லை. அதிலும் யாழ்ப்பாணத்துக்கு அவர் வருகை தந்தபோதேனும் அவரை நம் தமிழ் அரசியல் தரப்புகள் நேரில் சென்று வரவேற்று சந்தித்திருக்க வேண்டும். அதுவும் நடைபெறவில்லை.

இதை நாம் கூறும்போது, அவ்வாறானதொரு அழைப்பு எதுவும் எமக்கு விடுக்கப்படவில்லை என்று கூறப்படுமாயின் அது மிகத் தவறான பதிலாகும்.

ஆம் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் யாழ்ப்பாணத்துக்கு வருகிறார். அதிலும் அவர் எங்கள் தமிழகத்தின் உடன்பிறப்பு. எல்லாவற்றுக்கும் மேலாக இந்திய மத்திய அரசின் தீர்மானங்களில் காத்திரமான வகிபங்கை வழங்குகின்ற ஆளுமைமிக்க அமைச்சர்.

எனவே எங்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற அவரை அழைக்காமலே நாங்கள் சென்று வரவேற்றிருக்க வேண்டும். அது தான் முடியவில்லை என்றால் நல்லூர்க் கந்தனின் ஆலயத்திலேனும் அவரைச் சந்தித்து எங்கள் இனத்தின் அவலத்தை தீர்ப்பதற்கு ஆவன செய்யுங்கள் என்று ஒரு வார்த்தையை கூறி வைத்திருக்கலாம்.

என்ன செய்வது தமிழ் அரசியல் தரப்புகளிடம் ஒற்றுமை இல்லாத காரணத்தால் எதுவும் ஆகவில்லை. ஆக யாரொடு நோவோம். யார்க்கெடுத்து உரைப்போம்.

## இந்த வருடத்தில் மட்டும் 1,800 பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்

### பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம்

(கொழும்பு)

இந்த வருடத்தில் மாத்திரம் பல் கலைக் கழக பேராசிரியர்கள் 1,800 நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 800 பேர் இலங்கையில் பல்கலைக்கழக சேவையிலிருந்து நிரந்தரமாக வெளியேறியுள்ளதாக அதன் பேச்சாளர், சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இளங்கசிங்க தெரிவித்துள்ளார்.

ஏனைய 1,000 பேர் கல்வி விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பல்கலைக்கழகங்களில் வசதிகள் இன்மை பாரிய நெருக்கடியாக மாறியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ந)

## இலங்கை மின்சார சபைக்கு 8 கோடி ரூபாய் நட்டம்

### மின்சாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் மின்சாரம் கொள்வனவு செய்தமையால் 8 மாதங்களில் சுமார் 8 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

சிலர் மின்சார மானியை மாற்றியமைத்ததாலும் பல்வேறு சாதனங்களை சட்ட விரோதமாக பயன்படுத்துவதாலும் இது தொடர்பான இழப்பு ஏற்பட்டுள்ளதாக சபை குறிப்பிடுகிறது.

இந்த ஆண்டு ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை மின் சாரத்தை அவ்வாறான முறையில் பெற்றுக் கொண்டதனால் மின்சார சபைக்கு 7 கோடியே 90 இலட்சத்து 4857 ரூபாய் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. (நி)

## இலங்கை கிரிக்கெட் நிறுவன செயலாளர் இராஜினாமா

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் நிறுவன செயலாளர் மொஹான் டி சில்வா தனது பதவியை இராஜினாமா செய்வதற்கான கடிதத்தை சமர்ப்பித்துள்ளார்.

இலங்கை அணியின் தொடர்ச்சியான போட்டித் தோல் விகளைக் கருத்தில் கொண்டு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மற்றும் அதிகாரிகள் மீது பல தரப்பில் இருந்தும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதனைத் தொடர்ந்து இலங்கை கிரிக்கெட் நிறுவன செயலாளர் மொஹான் டி சில்வா தனது பதவியை இராஜினாமா செய்வதற்கான கடிதத்தை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ந)

## சொத்து விபரங்களை விரைவில் சமர்ப்பிப்பேன்

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விபரங்களை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் உயர் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் கட்டளையை மதித்து 15 மில்லியன் ரூபாயை செலுத்தியுள்ளதாகவும் இந்நிலையில் சொத்து விபரங்களை மறைக்கும் அளவுக்கு பெருமளவான சொத்துக்கள் தன்னிடம் இல்லை என்றும் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுப்பதை விடுத்து அரசியல் நோக்கத்துக்காக தான் இலக்கு வைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் பாதுகாப்பு தொடர்பான முக்கிய தகவல்களை மறைத்த தரப்பினருக்கு எதிராக இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## கல்வி, சுகாதார துறைகளுக்கு 9 பில்லியன் வழங்க திட்டம்

(கொழும்பு)

உலக வங்கியின் உதவியுடன் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நடை முறைப்படுத்தப்படும் செயற்றிட்டத்தின் ஊடாக சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளுக்கு ஒன்பது பில்லியன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனகவக் கும்புர தெரிவித்தார்.

நிலையான நாட்டுக்கு ஒரு வழி என்ற தொனிப் பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர இதனைக் குறிப்பிட்டார். (நி)

## பாரபட்சம் காட்டும் ஐக்கிய நாடுகள் சபை

### ஜனாதிபதி ரணில் விசனம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபைக்குள், காசா பகுதியின் மோதல் நிலைமைகளை ஒரு கோணத்திலும் இலங் கையை வேறு கோணத் திலும் பார்ப்பதில் நியாயமில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெலிமடை புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில், மனித உரிமைகள் தொடர்பில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இலங்கை மற்றும் காசா பகுதி தொடர்பில் இந்த நாடுகள் கடைப் பிடிக்கும் அணுகுமுறையில் எதற்காக வேறுபாடு காட்டப்படுகிறது என்றும் கேள்வி எழுப்பினார்.

எவ்வாறாயினும் இரு தரப்பினருக்கும் ஒரே மாதிரியான சட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார். அடுத்த செப்டெம்பர் மாத ஐ.நா மனித உரிமை கூட்டத்தொடருக்கு தூய்மையான கரங்களுடன் வந்தால் மட்டுமே இலங்கை பதிலளிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் தொடர்பிலான உலகளாவிய பிரகடனத்தை மேற்கோள் காட்டிய ஜனாதிபதி உலக நாடுகள் அனைத்தும் அதற்கு இணங்கிச் செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **திங்கட்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2023
"உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட் சபைக்கு முன்னால் சத்தியாக்கிரக போராட்டம் முன்னெடுப்பு



(கொழும்பு)

அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி படுதோல்வியடைந்ததைக் கண்டித்து இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு முன்பாக சிலர் சத்தியாக்கிரக போராட்டம் ஒன்றை செய்துள்ளனர்.

அவர்கள் கிரிக்கெட் நிறுவனத்திற்கு முன்பாக அமர்ந்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ளதால், அந்த இடத்திற்கு பொலிஸாரும் வரவழைக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

உலக கிண்ண கிரிக்கெட் போட்டி ஒன்றில் இந்தியாவிடம் 302 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி தோல்வியடைந்துள்ள நிலையிலேயே குறித்த போராட்டம் இடம்பெற்றுள்ளது. (நி)

# பங்களாதேஷிடமிருந்து இலங்கைக்கு மருத்துவ உதவி- சுகாதார அமைச்சு

(கொழும்பு)

பங்களாதேஷிடம் இருந்து 58 ஆயிரம் அமெரிக்க டொலர் மதிப்புள்ள மருந்துகள் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன மற்றும் இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரீக் எம்.டி அரிஃபுல் இஸ்லாமுடனான சந்திப்பின் போது இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தெரிவிக்கையில்,

இந்த மருத்துவ உதவியில் சுமார் 54 வகையான மருந்துகள் வழங்கப்படவுள்ளன. மேலும் புற்றுநோய் மற்றும் சிறுநீரகநோய் சிகிச்சைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும்.

இதனைத் தொடர்ந்து பங்களாதேஷ் சுகாதார அமைச்சு சார்பில் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள மருந்துகள் வழங்கப்பட எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்தார்.

குறித்த மருத்துவ உதவிகளுக்காக இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகரிடம் சுகாதார அமைச்சர் தனது நன்றிகளை தெரிவித்தார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 280 | 250 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 350 | 500 |
| தக்காளி | 200 | 200 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 100 | 150 | 150 |
| கோவா | 320 | 200 | 240 | 300 |
| கரட் | 350 | 350 | 350 | 400 |
| பூசணி | 80 | 80 | 80 | 100 |
| புடோல் | 200 | 200 | 150 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 260 | 320 | 300 | 350 |
| பாகற்காய் | 450 | 400 | 350 | 400 |
| வெண்டக்காய் | 240 | 200 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 350 | 400 | 250 | 350 |
| லீக்ஸ் | 250 | 200 | 200 | 300 |
| பீற்றூட் | 140 | 140 | 150 | 250 |
| கறிமிளகாய் | 450 | 350 | 500 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 400 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 280 | 200 | 250 | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1400 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 70-90 |
| இராசவள்ளி | 400 | 450 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 400 | 350 | --- | 500 |
| முள்ளங்கி | 80 | 150 | --- | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 170 | 50 | 50 |
| ஈரப்பலா | 80 | 150 | 100 | 150 |



# மரண அறிவித்தல்

## செல்வி.கனகேஸ்வரி செல்லத்துரை

(Rtd.Branch Manager-RG Company)

**நல்லூர்-மங்களகிரியை பிறப்பிடமாகவும்,திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட செல்வி கனகேஸ்வரி செல்லத்துரை (02.11.2023) வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.**

அன்னார்,காலஞ்சென்ற **உடையார்-செல்லத்துரை மீனாம்பாள் (திருநெல்வேலி- நல்லூர்)** தம்பதியின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்ற **உடையார்-பொன்னம்பலம் விசாலாட்சி (திருநெல்வேலி)** மற்றும் கந்தையா **பிரம்மாத்ம முதலி நல்லம்மாள் (நல்லூர்)** தம்பதிகளின் பேர்த்தியும், நாகேஸ்வரி, பரமேஸ்வரி, அகிலேஸ்வரி, பாலசுப்பிரமணியம், விக்னேஸ்வரியின் அன்பு சகோதரியும்,பிரான்சிஸ் சேவியர் மாணிக்கவாசகர், செல்வரட்ணம், ஜெயரட்ணம் சோதிமலர், சிவநேசன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஸ்ரீரஞ்சன், சந்திரமோகன், விஜிதபாமா ஆகியோரின் பாசமிகு சிறியதாயாரும், சுதாஜினி, சுதாகரன்,திருபாகரன், சுதர்ஜினி, சுபாஜினி, ஆதவன், அரவிந்தன்,ஆதினி,ஆதீசன், ஜனித், ஜதீஸ் ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும், விஷ்ணுகாருணியின் பாசமிகு மாமியாரும், மனோஹரி, கௌரி, பாலபாஸ்கரன், பிரபானந், குசந்தினி, சுபாஜினி, குணபாலன், மகேந்திரன், சுபத்திரா, மதிமுகராஜா, தர்சிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், பதஞ்சலி, பவணந்தி,பிரம்மாத்மன், பிரம்மகீதை, பிரம்மாட்சரண், பிரவீணா, பிரதிக்ஷா,வித்தகி, நதர்சனா, சதானா, டிலேஷ், கஜிஷ், அகிஷ், சதுர்த்திகன், சதுர்த்தியாணி,மகிஷா, மகிஷ், மனிஷா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

**அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணியளவில்,சைவப் பாடசாலை வீதி,திருநெல்வேலியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.**

இவ் அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**செல்லத்துரை பாலசுப்பிரமணியம்(தம்பி)**
**(உரிமையாளர்- கவிலா ரேட் சென்ரர்)**
**தொ.பே.இ.ல-077 310 7601**

**குடும்பத்தினர்.**

(17670)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்த வெற்றி...

யாக மின் கட்டணத்தை அதிகரித்து இந்நாட்டிலுள்ள இலட்சக்கணக்கான மின் பாவனையாளர்களை ரணில் அரசாங்கம் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

இந்நிலையில், பெறுமதி சேர் வரி 18 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது ஓர் பிற்போக்குத்தனமான வரி விதிப்பாகும்.

யுத்த வெற்றி என்ற பெயரிலும் தேசப்பற்று என்ற போர்வையிலும் மக்களின் தேசிய வளங்களை ஒரு குடும்பம் எவ்வாறு அபகரித்தது என்பது தெரியவேண்டும்.

யுத்தம் நிறைவடைந்துள்ள போதிலும் முழுமையான சுதந்திரம் வழங்கப்படவில்லை. நாட்டின் வளங்களை இவர்கள் எவ்வாறு திருடினார்கள் என்பதை பண்டோரா பத்திரங்கள் வெளிப்படுத்தின.

நாட்டை அழித்த ராஜபக்ஷவுக்கு நான் துணைபோகமாட்டேன் என்பதால் அவர்களுக்கு எதிராக நாட்டின் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை நாட்டுக்கு திருப்பிப் பெறுவோம்" என தெரிவித்தார். (ம-7)

## அரசின்...

பதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி,

மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் மாவட்டத்தின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் பணிகளை, அரசாங்க அதிகாரிகள் துரிதப்படுத்த வேண்டியது அவசியம். நாட்டை பின்நோக்கி கொண்டு செல்லும் வேலைத்திட்டத்திற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

அரச நிறுவன பிரதானிகள் தமது நிறுவனங்கள் தொடர்பில் சரியான தெரிவைக் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் அரச நிறுவனங்களிடத்திலிருந்து மக்களுக்கான சேவை கிடைக்காது" எனவும் தெரிவித்தார். (ம-7)

## முதல் 10...

இதனடிப்படையில், 2.3 மில்லின் குழந்தைகள் உட்பட 5.7 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் மனிதாபிமான உதவி தேவைப்படும் பட்டியலில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் நிலையானது மிகவும் பயமுறுத்துவதாகவும் அதில் கோடிடப்பட்டு காட்டுகின்றது.

சராசரியாக இலங்கையில் ஒரு குடும்பத்தின் காலை உணவு தேவையானது, தோராயமாக 36000 ரூபாயை ஒரு மாதத்திற்கு செலவிடவேண்டிய நிலை காணப்படுகின்றது.

குறித்த 36000 ரூபாய் காலை உணவுக்காக மாத்திரமே தவிர பிற தேவைகளை பூர்த்தி செய்ய அல்ல எனவும் தெரிவிக்கப்படுகின்றது,

பகல் உணவு பொதியின் விலை (மாட்டிறைச்சி அல்லது மீன் இல்லாமல்) ஒரு நாளைக்கு 350 ரூபாய் தேவைப்படுகின்றது.

இதில் 350X4X30 என கணக்கிட்டால் 42,000 ரூபாய் ஒரு மாதத்திற்கு செலவாகின்றது.

நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு உணவிற்கு 42,000 ரூபாய் செலவாகின்றது.

அதாவது நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு காலை, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான செலவு 120,000 ரூபாய் எனவும் தெரியவந்துள்ளது. (ம-7)

## ரணிலின்...

ளார்.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகுத் தீர்வு காண்பதாக ஜனாதிபதி உறுதியளித்தபோதும் அவை நிறைவேற்றப்படாததால் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## யாழ்.பல்கலை...

இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு - மயிலத்தமடு, மாதவணை மேய்ச்சல் தரைகள் மீதான சிங்கள குடியேற்ற ஆக்கிரமிப்பையும், தொடர்ந்து இடம்பெறும் கால்நடைகளின் உயிர்க்கொலைகளையும் கண்டித்து இன்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் போராட்டம் இடம்பெறவுள்ளது.

மயிலத்தமடு, மாதவணை மேய்ச்சல் தரை பண்ணையாளர்கள் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## பாராளுமன்றம்...

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"தமிழ் மக்களுக்குத் தீர்வு வேண்டும்" என்று சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் விடுக்கும் கோரிக்கையை ஏற்கின்றோம். அதேபோல் அவர்களும் ஜனாதிபதியின் தேசிய ரீதியான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அப்போதுதான் பாராளுமன்றத்தில் ஆளும், எதிரணி என இரு தரப்பினரும் இணைந்து ஒரு தீர்வுத் திட்டத்தை முன்மொழிந்து அதை நிறைவேற்றிக் கொள்ள முடியும்" என்றார். (ம-7)

## நூதனமான...

வேண்டும் எனவும், நீங்கள் ஒப்படைத்த பணம் மீண்டும் உங்களது கணக்கில் வைப்பிலிடப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் சமுர்த்தி உத்தியோகத்தர்களிற்கு வேலைப்பழு அதிகம் காணப்படுவதால் இன்றைய கணக்கினை முடிக்க வேண்டும் எனவும் ஆகையால் மக்களிடம் காசை அறவிட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

சமுர்த்தி உத்தியோகத்தரின் கட்டளைக்கமையவே தாம் இப்பகுதியில் மக்களின் காசுகளை பெற்று வருவதாக தெரிவித்ததை அடுத்து வீட்டு உரிமையாளர் தன்னிடம் தற்பொழுது பணம் இல்லை என தெரிவித்துள்ளார்.

அங்கு வந்தவர்கள் சமுர்த்தி உத்தியோகத்தரிடம் கதைத்து விட்டு சொல்கிறேன் என தொலைபேசியில் உரையாடுவது போல் பாசாங்கு செய்துள்ளனர். மீண்டும் அவரிடம் வந்து அம்மா சரி உங்களிடம் இருக்கின்ற 5000 ரூபாய் பணத்தை தாருங்கள் மிகுதி பணத்தை சமுர்த்தியில் எடுத்து நாளை தந்தால் மாத்திரமே உங்களது 80 ஆயிரம் ரூபாய் பணத்தை பெற முடியும் என தெரிவித்துள்ளனர்.

அந்த வீட்டில் இருந்த முதியவரும் சரி நாளைக்கு உங்களது பணத்தை பெற்று தருவதாக தெரிவித்து 5000 ரூபாய் பணத்தை ஒப்படைத்துள்ளார். இதுபோன்று இவர்கள் பலரிடம் பணம் வசூலித்து சென்று உள்ளனர்.

இது தொடர்பாக சமுர்த்தி உத்தியோகத்தரிடம் வினவியபோது, இது தொடர்பாக தமக்கு எந்தவித தகவலும் தெரியாது எனவும், இது தொடர்பாக தமக்கு எந்தவித தகவலும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-7)

## தேநீர்...

சீனியின் விலை அதிகரிப்பு காரணமாக பிளேன் ரீ விலை 5 ரூபாவினாலும் பால் தேநீர் விலை 10 ரூபாயினாலும் அதிகரிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அரிசி, மரக்கறிகள், கோழி இறைச்சி மற்றும் வெங்காயம் ஆகியவற்றின் விலை அதிகரிப்பு காரணமாக சாப்பாட்டு பொதி ஒன்றின் விலை 20 ரூபாயினாலும், கொத்து மற்றும் ஃப்ரைட் ரைஸ் விலை 20 ரூபாயினாலும் அதிகரிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-7)


கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3530
சீட்டிழுப்பு திகதி 04.11.2023
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 06 11 52 67
D
40650
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.11.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1318
L 31 35 43 49 L
Double Chance 16938

நிதி Lucky 7 லக்கி
திகதி 04.11.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0114
L7 இலக்கம் 3 4
வெற்றி இலக்கினம்: விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 9 6 6 6 3 3

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.04
சீட்டிழுப்பு இலக்கம் 597
மீனம் 33 46 50 62 மீனம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 04/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1636
C 21 01 07 08 55
Double Chance 41578

மஹஜன சம்பத
திகதி 2023/11/04
சீட்டிழுப்பு இலக்கம் 5288
G 4 3 7 4 0 0
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2262 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.11.04 தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 07 71 72 ஆங்கில எழுத்து Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,438,580/-
DLB

சனிதா
திகதி 2023.11.04 வெற்றி வாரம் 4423
வெற்றி இலக்கங்கள் 06 42 67 71 ஆங்கில எழுத்து A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,819,616.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3974 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.11.04 தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 18 21 22 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,603,880/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 16 11 39 44 62
1438 சிவப்பு 2023.11.04 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 460,888,264.20
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி: 011-2 333 546-47

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 643 திகதி 2023-11-04 வர்ணம் ஆரஞ்சு நிறம்
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 23 27 31 விதி எண் 05
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2088
சீட்டிழுப்பு திகதி: 2023.11.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,749,720/-
வெற்றி இலக்கங்கள் 18 41 46 73 W


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Joyful Holy
Christian Matrimony

**ELITE CHRISTIAN MATCHMAKING SERVICE**
★ Personalized Service ★ Private & Confidential
★ Premium Database



www.joyfulholymatrimony.lk
270, Ferguson Road, Thotalanga, Colombo 15, Sri Lanka.
info@joyfulholymatrimony.lk
00 94 760 662 295 00 94 715 863 893
FREE FOR FIRST 500 GIRLS
VISION HOLDERS : REV. AJITH SOLOMONS & VINO SOLOMONS (17647)

## Group Classes
**(English Medium)**
**9,10 & 11**

Science : R.Saseelan
B.Sc(Hons)
077 187 6571
Maths : U.Mirojan
B.Sc(Hons) PGDE(R)
077 181 7983
English
Literature : S.Mayuran
M.A (Linguistics)
077 969 9964 (17675)

**Address :**
Illupaiyadi Junction
Palaly Road, Jaffna.
**Start :**
07.11.2023 (Tuesday)
3.00Pm

## SKYLINE WATER PROOFING
**நீர்க்கசிவில் இருந்து தீர்வு வேண்டுமா?**

சிறந்த இரசாயனப் பொருட்களினால் உத்தரவாதத் துடன் உங்கள் கடைகள், கோவில்கள், வில்லு மண்டபங்கள், முகட்டுக் கூரைகள், குளியலறைகள் என்பவற்றில் உள்ள நீர்க்கசிவுப் பிரச்சினைகளை தடுப்பதற்கு இன்றே கீழ்காணும் தொலைபேசி எண்ணிற்கு அழையுங்கள்.
(இரசாயனப் பொருட்களையும் சிறந்த விலைக்கழிவில் பெற்றுக் கொள்ள முடியும்)

Skyline Holders (Pvt) ltd
No. 89, Old Park Road, Jaffna.
077 722 0095 / 076 663 6481
021 221 4994
www.skylineholders.com
Skylineholders2021@gmail.com (17665)

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை
WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer
ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7558)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

## இராஜ மருத்துவம்

பேறறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர்
மீண்டும் யாழ்ப்பாணத்தில் பக்கவாதம், மூட்டுவாதம், சூதகவாயு, நெஞ்சுக்குத்து, நெஞ்சடைப்பு, பாலியல் குறைபாடுகள், தொய்வு, நீரிழிவு, நித்திரையின்மை, மனநோய், நோவு, விஷகடிக்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள 076 274 4488
வல்லை வீதி, சங்கானை (C-7562)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH *Special offer for all the courses*
- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம் (17549)
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
**T.P : 077 780 3970, 074 007 1970**

## மணமகள் தேவை

யாழ் கௌரவ 48 வயதான திருமணமாகாத கணனி பயிற்றுவிப் பாளருக்கு மணமகள் தேவை. சாதகம் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. சீதனம், திருமணச் செலவுகள் எதிர்பார்க்கப்படமாட்டாது.
தொடர்பு (17664)
**075 113 2599**

## மணமகள் தேவை

விவாகரத்துப் பெற்ற 1986 இல் பிறந்த அரச பதவி, திருவோணம் மணமகள் தேவை.
தொடர்பு (17667)
**077 636 5949**

## அமெரிக்க லொத்தர் விசா

நாளையுடன் பதிவுகள் நிறைவடைகின்றன
இறுதி சந்தர்ப்பம் - தவறவிடாதீர்கள்
LOADING
0768226244
55000 இலவச விசாக்கள்
நீங்களும் அமெரிக்காவில்...



V2 Travels
V2 TRAVELS 0768226230

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-7564)
VISA • STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்.
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
**0777-068-777**

## காணி விற்பனைக்கு

K.K.S Beach இல் இருந்து 1 Km தூரத்தில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
பரப்பு 15 இலட்சம்
தொடர்புகளுக்கு (17574)
**074 234 3241**

## இரண்டாம் மொழி சிங்களம்
## தரம் 6 2024

புலமைப் பரிசில் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான இரண்டாம் மொழி சிங்கள வகுப்புக்கள் ஆரம்பம்
15.11.2023 புதன்கிழமை
இடம் : நீராவியடி
**077 214 0220**
**077 990 6867**
40, மனிக்கூட்டு வீதி, நீராவியடி (17663)

## விமலம் திருமண சேவை

**கனடா, இலங்கை**
தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற உள்நாடு, வெளிநாடு வரன்கள் தாராளமாக உள்ளன. (17616)
கனடா
+16476571347 / +14372446737
இலங்கை
**077 240 9276**

## இலவச Taxi Meter

நீங்கள் உங்கள் வாகனங்களுக்கு Pickme Taxi Meter இல் இணைக்க அழைக்கவும்.
(முச்சக்கர வண்டி / CAR / VAN / மோட்டார் சைக்கிள்) (17668)
**077 473 7737**

## IELTS - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17620)

## VILLAGE HOTEL
## பஸ் சேவை
**JAFFNA EXPRESS**
AIRPORT PICK UP DROP SERVICE
வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/=



(17484)
**T.P:077 544 8503**

## Happy Supermarket - உரும்பிராய்

**உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...**

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 274/= (max3Kg) | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 430/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 293/= | |
| 1 Kg றவை | - 288/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 170/= | |
| 1 Kg அரிசி மா | - 189/= | |
| 1 Kg கோதுமை மா | - 179/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 187/= | |
| 400g அங்கர் பால்மா | - 1040/= | ~~(1080/=)~~ |
| 70g பேபி சோப் | - 108/= | ~~(145/=)~~ |
| 400g நெஸ்டமோல்ட் | - 800/= | ~~(830/=)~~ |
| 01 சந்தூர் சோப் | - 140/= | ~~(175/=)~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 360/= | ~~(430/=)~~ |

1040/=



~~1080/-~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம். (17680)

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
Happy Supermarket
0777 8080 30

## தரமான காணி விற்பனைக்கு உண்டு

GOLDEN Real Estate

**யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 60 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலபரப்பு, நன்னீரூற்று
- வடமாகாண சபை, சித்த மருத்துவமனை ஆகியவற்றிற்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- 18 அடி பாதை
- யாழ். பஸ் நிலையத்திலிருந்து 6 km தூரம் மிகவும் நல்லசூழல்,
- குடியிருப்புகள் சூழவுள்ள காணிவீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- பரம்பரைக்காணி, பல வருடகால தோம்பு, தூய உறுதி
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் காலை 06.00 - மாலை 06.00 மணிவரை
- 1 பரப்பின் விலை 2-4 லட்சம்

Golden Real Estate (PVT) Ltd
Director & Owner : T.Kalaithasan (17676)
**077 468 3354, 077 288 0152, 077 623 4204**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org